# பெண் கதைமாந்தர்களின் பின்புல வாழ்வியல் - 'போராட்டம்'

**திருமதி செ. லிட்டில் ப்ளவர்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஜெயராஜ் அன்ன பாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)' பெரியகுளம்

**மலர்:** 3
**சிறப்பிதழ்:** 4
**மாதம்:** மார்ச்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வளரத்தொடங்கி இந்நூற்றாண்டுகளில் மிகப்பரவலாக, ஓர் இலக்கிய வகையாக வளர்ந்திருப்பது புதினமாகும். புதினத்தை ஒரு குறிப்பிட்ட சட்டத்துக்குள் திணிக்க முடியாது. காரணம் அது மனித சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. எனவே மாற்றத்திற்குரியது. அது எந்த வகையான கட்டுதிட்டங்களும் இல்லாத ஒரு நெகிழ்ந்த கலை வடிவம் ஆகும். புதினம், சிறுகதை, கவிதைகள் மற்றும் நாளிதழ் செய்திகள் பெண்களின் உணர்வுகளையும், அவலங்களையும், மறைக்காமல் வெளிக்காட்டுகின்றன எனலாம். பெண்கள் கல்வியிலும், பொருளாதார முறையிலும் முன்னேறிக்கொண்டு இருந்தாலும், இன்னொரு வகைகளில் அவர்களுக்குத் துன்பங்கள் நேர்ந்து கொண்டதான் இருக்கின்றன. எல்லாம் எல்லாருக்காகவும் என்ற கோட்பாட்டின் படி ஆணுக்கு நிகராக பெண்ணுக்கும் சமநீதி, சமவாய்ப்பு வழங்க, தகுதியான ஒரு சமுதாயத்தை உருவாக்க எழுந்ததே பெண்ணியமாகும். பெண்களுக்குச் சமுதாயத்தால் ஏற்படும் அனைத்துச் சிக்கல்களையும் ஜோதிர்லதா கிரிஜாதன்னுடைய புதினத்தின் வழி எடுத்தியம்பி அச்சிக்கலுக்குரிய தீர்வாக எவ்வழியை எடுத்துரைக்கின்றனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரை.

## பாத்திரப்படைப்பு

கதை இலக்கியமானது சமூகம் மற்றும் மக்களின் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் கோர்வையாகும். கதையில் அமையும் நிகழ்ச்சிகளை வாசகன் சில சமயம் மறப்பதுமுண்டு. ஆனால் அக்கதையில் இடம் பெறும் கதைமாந்தர்களை மறப்பது என்பது எளிதான காரியம் அல்ல, இதற்குக் காரணம் படைப்பாசிரியரின் திறமையே. வாசகன், அப்படைப்பில் உள்ள கதைமாந்தர்கள் மற்றும் நிகழ்ச்சிகள் அனைத்தும் தம் வாழ்வில் நிகழ்ந்த அல்லது தான் கேள்விப்பட்ட ஒன்றாகவே பார்க்கிறான்.

ஒவ்வொரு புதினத்திலும் கதை நிகழ்வுகளைக் கதைக் கருவோடு பின்னி பிணைத்துக் கொண்டு செல்பவர்களாக கதைமாந்தர்கள் திகழ்கின்றனர். இத்தகைய சிறப்புத்தன்மை வாய்ந்த கதைமாந்தர்கள் தான் ஒவ்வொரு படைப்பிற்கும் முக்கியம். அவர்கள் இல்லையேல் அப்படைப்பு சிறக்காது. "பாத்திரப்படைப்பு என்பது ஒரு பெயர் சூட்டிவிடுவதோ, அங்க வருணனை நடத்தி விடுவதோ அல்ல. மனம், அறிவு, சிந்தனை, குண இயல்பு, சூழ்நிலைகளின் போது வெளிப்படும் உணர்ச்சிகள் இவற்றையெல்லாம் கூர்ந்து அறிந்து அனுபவமாக வெளிப்படுவதைத் தீட்டுவதாகும்"1 என்று பாத்திரப்படைப்பின் அருமைப்பாட்டினை ஜெயகாந்தன் விளக்குகிறார்.





## புதினத்தில் பாத்திரத்தின் முக்கியத்துவம்

புதினத்தின் சிறப்பிற்குப் பாத்திரப்படைப்பும் ஒரு காரணமாகும். படைப்பாசிரியர் கதைமாந்தர்களைச் சிறந்தமுறையில் படைத்துவிட்டால் அப்புதினம் பாதி வெற்றி பெற்றதாக அர்த்தம். எனவே கதைமாந்தர் என்பவர்கள் கதைக்கருவிற்கு துணையாக அமைவதோடு மட்டுமில்லாமல் வாசகர் மனதில் கதைக்கருவை நிலைநாட்டுபவர்களாகவும் திகழ்கின்றனர்.

"புதினத்திற்குக் கரு இன்றியமையாததே. ஆயின் அது கதையின் எலும்பே ஆகும். கருவுக்குப் பொருளையும், பொருண்மையையும், உயிரையும் தரவல்ல ஒன்று உண்டு. அது பாத்திரம் ஆகும்"2 என்று மேரேன் எல்வுட் கூறுவதாக இரா.மோகன் குறிப்பிடும் கூற்றிலிருந்து, புதினத்திற்கு மற்ற கூறுகளை விடப் பாத்திரம் எந்த அளவிற்கு முக்கியமானது என்பதை அறிய முடிகிறது.

## ஜோதிர்லதா கிரிஜா

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு என்ற ஊரில் 1935-ஆம் ஆண்டில் பிறந்தார். பள்ளிப்பருவத்தில் குழந்தை எழுத்தாளராக அறிமுகம் ஆனார். அவரது முதல் சிறுகதை 1950 ஆம் ஆண்டு 'ஜீஸ்லி' என்ற பத்திரிக்கையில் ரா.கி.ரங்கராஜன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது.

அமரர்கள் தமிழ்வாணன், அழ.வள்ளியப்பா, ஆகியோரால் ஊக்குவிக்கப்பட்டதன் பின், 1968 - இல் கலப்புமணம் பற்றிய சர்ச்சைக்குரிய குறுநாவலான 'அரியும் சிவனும் ஒன்றே' வாயிலாக ஆனந்த விகடனில் பெரியோர்க்கான எழுத்தாளராக அறிமுகமானார். ஆங்கிலத்தில் 1975-இல் ஃபெமினாவின் வாயிலாக அறிமுகமானார். 35 சிறுகதைகள், ஒரு மினி தொடர்கதை, ஆங்கில மரபுக் கவிதை, இராமாயணம், திருக்குறள், காந்தியடிகளின் வாழ்க்கை நிகழ்வுகள், நபிகள் நாயகத்தின் பொன்மொழிகள், சத்தியசாயி பாபாவின் வரலாறு ஆகியவை டாக்டர் கிருஷ்ண ஸ்ரீனிவாஸ் நடத்தும் POET இல் தொடர்களாக வந்துள்ளன.

காந்தியடிகளின் வாழ்க்கை நிகழ்வுகள் (Gandhi Episodes) Metverse Muse (Visakhapatnam) இல் வந்து கொண்டிருக்கிறது. THE HINDU இல் சில OPEN PAGE ARTICLES, ALIVE இல் சில அரசியல் கட்டுரைகள் ஆகியவை வந்துள்ளன. 1987 - இல் ஆனந்த விகடனில் நகைச்சுவை எழுத்தாளராகவும் அறிமுகமானார்.

'நம்நாடு' எனும் சிறுவர் நாவல் உக்ரைய்ன் மொழியாக்கத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1987 இல் ரஷ்யாவின் மாஸ்கோவில் நடந்த இந்தியக்கலை விழாவில் வெளியிடப்பட்டது.

630 சிறுகதைகள், 23 புதினங்கள், 63 குறும்புதினங்கள், 63 சமுதாயப் பிரச்சனைகள் சார்ந்த கட்டுரைகள், சில வசன கவிதைகள் ஆகியன இவரால் எழுதப்பட்டுள்ளன.

## பரிசுகள் விருதுகள்

தினமணிக்கதிர் நாவல் போட்டி, கல்கி பொன் விழா வரலாற்று நாவல் போட்டி, லிலி தேவசிகாமணி அறக்கட்டளையின் சிறுகதைத் தொகுதிக்கான பரிசு, அமுத சுரபி நாவல் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் விருது, திருப்பூர்க் கலை இலக்கியப் பேரவையின் சமுதாய நாவலுக்கான பரிசு, தமிழக அரசின் மிகச்சிறந்த நாவலுக்கான பரிசு, செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளையின் பன்முக எழுத்தாளர் விருது, சென்னைக் கம்பன் கழகத்தின் சிவசங்கரி விருது, ஈரோடு புத்தக விழாவில் பாராட்டு, ஆகிய பல்வேறு தரப்பட்ட நிலையில் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## போராட்டம் - கதைமாந்தர்கள்

### முதன்மை பெண் கதைமாந்தர்

- மங்கம்மா

### துணைமை பெண் கதைமாந்தர்கள்

- ராசம்மா, காந்திமதி, வள்ளியம்மாள்

### ஆண் கதைமாந்தர்கள்

- வடிவேல், வரதராசன், ருக்மாங்கதன், ஏகாம்பரம், முத்துராசு, செல்லப்பன், மாயநாதன், மகாலிங்கய்யர்.

### முதன்மை பெண் கதைமாந்தரின் பின்புல வாழ்வியல் சிக்கல்களும் தீர்வுகளும்

படைப்பாசிரியரின் மனதை வெளிப்படுத்துவதாக அவரது படைப்பில் உள்ள கதைமாந்தர்கள் அமைவதால் அப்படைப்பின் கதை நிகழ்ச்சிகள் கதைமாந்தர்களைக் கொண்டே பின்னப்படுகின்றன. ஜோதிர்லதா கிரிஜாபெண்களின் வாழ்க்கை இச்சமூகத்தாரால் எவ்வகையில் பின்னப்பட்டுள்ளது என்பதை தன்னுடைய எழுத்துக்களின் மூலம் மக்களுக்கு தெரிவிக்க எண்ணி, போராட்டம் புதினத்தில் வரும் பெண் கதைமாந்தர்களின் வழியே தன்னுடைய உட்கிடக்கையை வெளிப்படுத்துகின்றனர். வெளிப்படுத்துவதோடு நில்லாமல் அவ்வாழ்வியல் சிக்கல்களுக்கான தீர்வுகளையும் தம் புதினத்தில் வரும் கதைமாந்தர்களின் மூலம் எடுத்தியம்புகின்றார்.

#### மங்கம்மா

'போராட்டம்' புதினத்தின் முதன்மை பெண் கதைமாந்தர். அவ்வூரிலே பார்ப்பனர் அல்லர்தாரில் அதிகம் படித்தப்பெண் மங்கம்மா தான். ஒன்பதாவது வரைப் படித்துள்ளாள். கணவன் வடிவேல், இரண்டு பெண்குழந்தைகள், நாத்தனார் ராசம்மா என அளவான, அழகான குடும்பம் தான் மங்கம்மாவின் குடும்பம். நன்றாக உழைப்பவள். தன் அப்பா தனக்கு சீதனமாகக் கொடுத்த மாந்தோப்பை மூலதனமாக வைத்து தன் குடும்பத்தை ஒரு நல்ல நிலைமையிலேயே வைக்கப் பாடுபடுபவள். கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் குடும்பமாய் வாழ்ந்தார்கள். "நாமளும் ரெண்டு பொம்பளப் பிள்ளங்களை பெத்து வச்சிருக்குறோம், ரெண்டு பேத்தையும் படிக்க வைக்கணும்குற ஆசை வேற நமக்கு இருக்குது. இதுங்க ரெண்டும் படிச்சு முடிச்சுப் பத்திரமா இருக்கணுமேங்குறதை நெனச்சா அடி வயித்துல பகீங்குது"3 என்று கணவனும் மனைவியுமாகப் பேசிக்கொண்டார்கள். இது ஒவ்வொரு பெற்றொரின் கடமையுணர்வையும எடுத்தியம்புகிறது.

ராசம்மாளும், அவ்வூரிலே பெரிய வீட்டுக்காரர் வரதராசனின் மகன் ருக்மாங்கதனும் காதலிக்கின்றனர். இவர்களின் திருமணத்திற்கு வரதட்சணையாக வரதராசன் மாந்தோப்பைக் கேட்கின்றான். தங்களின் வாழ்க்கை ஆதாரமாக இருக்கும் மாந்தோப்பை, தன் நாத்தனாரின் திருமணத்திற்காகத் தர சம்மதிக்கின்றாள். வடிவேலுவும், ராசம்மாளும் எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவள் தன் முடிவிலிருந்து மாறுவதாய் தெரியவில்லை. "நாத்தனாருக்குப் பரிஞ்சுக்கிட்டு வர்ற ஒரே பொம்பளை இந்த உலகத்துலயே நீ ஒருத்தியாகத் தான் இருப்பேன்னு நினைக்கிறேன்"4 என்று வடிவேல் தன் மனைவியிடம் கூறி பெருமைப்பட்டுக் கொள்கிறான்.

வரதராசனுக்கு இவள் மாந்தோப்பு தருவது தெரியாததால் ராசம்மாளை நாசம் பண்ண ஆட்களை அனுப்புகின்றான். இவள் கெட்டுப்போனதால் ருக்மாங்கதன் இவளைத் திருமணம் செய்ய மறுக்கின்றான். வடிவேல் ருக்மாங்கதனிடம் நியாயம் கேட்டுப் போக ருக்மாங்கதனின் அடியாட்கள் அவனை அடித்து பைத்தியமாக்குகின்றனர். மங்கம்மா வரதராசன் மேல் போலீஸில் புகார் தெரிவிக்கின்றாள். இப்புகார் நீதிமன்றத்திற்குச் செல்லவே, வரதராசன் கோபம் கொண்டவனாய், மங்கம்மாளின் குழந்தைகளைக் கொலைச் செய்ய ஏற்பாடு பண்ணுகினறான். இதை உணராத மங்கம்மா "ராசம்மாவை அவன் மணக்க முன் வந்துவிட்டால் தன் கணவன் மனநோய்க்கு ஆளானதற்குக் காரணமாக இருந்த அவனை மன்னித்து விட அவள் தயாராக இருந்தாள்"5 . ஆனால் தந்தையும் மகனும் இதற்குச் சம்மதிக்காததால் நீதிமன்றத்திற்கு மறுபடியும் செல்கிறாள். ஒருநாள் குழந்தைகள் இருவரும் காணாமல் போய் விடவே, மங்கம்மாள் வரதராசன் தான் குழந்தைகளை ஏதாவது செய்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றாள். "அந்த ஊர் ஆற்றின் கரையில் குழந்தைகளின் ஊதிப்போன உடல்கள் ஒதுங்கி இருந்தன. பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது தாகம் எடுத்திருக்க வேண்டும் என்றும் தண்ணீர் குடிக்க ஆற்றில் இறங்கியவர்கள் தவறி விழுந்து அடிபட்ட வேகத்தில் கீழே இழுக்கப்பட்டு முழுகி விட்டிருக்க வேண்டும்"6 என்று ஊரார் நம்பினர்.

காவல் நிலையத்திலிருந்து வந்த தம்பித்துரை மங்கம்மாவிடம் "அம்மா, கோயமுத்தூர் கலெக்டர் மதுரைக்கு வந்துட்டாரு. நம்ம சிங் மாதிரி ஆள் இல்லே இவரு. இவரு பணக்காரங்களுக்கு மட்டுமே உதவற ஆள். மனசுல வச்சுக்குங்க, இனி உங்க கேஸ் கெடப்புக்குப் போயிடும். வீணாக் காசைச் செலவழிச்சுக்கிட்டு மதுரை கிதுரைன்னு அலையாதீங்க. இனிமேற்பட்டு யாருக்காக நியாயம் கேக்கப் போறீங்க? கொழந்தைங்களே போயிடிச்சு"7 என்று கூறினார்.





தம்பித்துரை சொன்ன சொற்களில் புதைந்திருந்த நடைமுறை விழிப்பு அவளுக்கு புரியவே செய்தது. இருந்தாலும் வரதராசனை எப்படியாவது பழி வாங்கியேத் தீர வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவள் மனதிலிருந்து விடுபடவேயில்லை.

அதிக மக்கள்தொகை இல்லாத கிராமமாதலால் மங்கம்மாவின் குடும்பத்துக்கு அடுக்கடுக்காய் நேர்ந்துவிட்ட துயரங்கள் பற்றி எல்லாருமே வாய் ஓயாது பேசினார்கள். வரதராசன் தான் மங்கம்மாவின் குடும்பத்திற்கு இவ்வளவு கொடுமைகளையும் செய்தது என்று ஊரார் அரசல்புரசலாகப் பேசினர். "கொழந்தைங்க சாவினால் ஏற்பட்டிருக்கிற அதிர்ச்சியிலேருந்தும், வருத்தத்துலேருந்தும் கொஞ்சமாச்சும் மீண்டதுக்கு அப்புறம் அது எப்படி, ஏதுங்கிறதைப் பத்தி யோசிப்பேன். பயந்துட்ட மாதிரி இருந்து காரியம் சாதிக்கணும். ஒளிஞ்சிருந்து தாக்கணும். உன்னை என்ன செய்யறேன் பாருன்னு சொல்லிக்கிட்டுப் போய்த் தாக்கக் கூடாது. ஆள் உஷாராயிடுவான்.இருக்கட்டும், இருக்கட்டும், ஏழைபாழைங்களுக்கும் காலம் வரத்தான் செய்யும்"8 என்று நினைத்தவளாய், முருகேசனிடம் "எம் புருசனுக்கோ பயித்தியம் பிடிச்சு நிரந்தரமா ஆசுபத்திரியில இருக்காரு, கொழந்தைங்களும் போயாச்சு. இனி யாருக்காகவும் நான் உயிர் வாழ வேண்டிய அவசியம் இல்லாட்டியும், ராசம்மாவுக்காக வாழ்ந்தாக வேண்டிய கட்டாயத்துல இருந்தேன். இப்ப அந்த ஒரு இக்கட்டும் தீர்ந்திடிச்சு"9 என்று கூறினாள்.

வரதராசன் குறட்டை விட்டப்படி உறங்கிக் கொண்டிருந்தான். காற்றுக்காகச் சன்னலுக்கு மிக அருகே அவன் படுத்திருந்தது மங்கம்மாவுக்குத் தோதாக இருந்தது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்ட பின் துப்பாக்கியை நான்கு தரம் அவரது உடலுக்குள் குண்டு நுழையும் வண்ணம் அவள் இயக்கினாள். பின்னர் வீட்டுக்கு வந்த மங்கம்மா துப்பாக்கியைக் கட்டிலுக்கு அடியில் வைத்து விட்டு ராசம்மாளுக்கு கடிதம் எழுதினாள். "கடைசியில் ஒரு வழியாக அந்த நச்சுப்பாம்பு வரதராசனை வஞ்சம் தீர்த்துக்கொண்டு விட்டேன். நீதி தேவன் பத்திரிக்கையிலிருந்து வந்திருந்த தம்பிகளின் துப்பாக்கிகளில் ஒன்று எனக்கு அதற்கு உதவியது. குற்றத்தை ஒப்புக்கொண்டு நாளை காவல்துறையினரிடம் சரண் அடையலாம் அல்லது யாராலும் எதுவும் செய்யமுடியாத இடத்துக்குப் பயணப்பட்டு விடலாம். மானமுள்ள உன் மங்கம்மா இரண்டாவது வழியைத் தான் தேர்ந்தெடுப்பாள் என்பது உனக்கே தெரியும்"10 என்று எழுதிவிட்டு, அரளி விஷத்தை குடித்து விட்டு முகத்தில் புன்னகையுடன் உறங்கிக் கொண்டிருந்த ராசம்மாளின் முடியைப் பட்டும் படாமலும் கோதிவிட்டு, உதடுகள் படாமல் சன்னமாய் முத்தம் கொடுத்துவிட்டு, இந்நாள் வரை உணர்ந்து அறியாத நிம்மதியுடன், மனநோயாளிகள் மருத்துவமனையில் இருக்கும் தன் கணவன் வடிவேலுவையும், கொலைச் செய்யப்பட்ட தன் இரு குழந்தைகளையும் நினைத்தவளாய், லேசான புன்னகையுடன் ராசம்மாவின் அருகில் போய் படுத்தாள்.

மங்கம்மாள் என்ற பெண் கதைமாந்தர் தன் நாத்தனாருக்கு ஏற்படும் கொடுமையைக் கண்டு கொதிக்கின்றாள். குழந்தைகளைக் கடத்திக் கொன்றதை நினைத்து வெறிகொள்கிறாள். சாதாரண குடும்பப் பெண்ணாகிய அவள் மனதில் மேலும் மேலும் பல துயரச்சம்பவங்கள் நுழ்ழந்து அவளது மனத்தைப் போராட்டக் களமாக்கி, அவளைக் கொலைகாரியாகவே மாற்றிவிட்டது. நீதித்துறை ஏழைகளுக்கு கண்மூடியிருப்பதால் இவளே தீர்பை வழங்குகின்றாள். ஆனால் கடைசியில் துயரம் அதிகரிக்க, வஞ்சகர்கள் நிறைந்த இவ்வுலகில் வாழ விருப்பம் இல்லாமல் உயிரை விடுகின்றாள்.

புதின ஆசிரியர் ஜோதிர்லதா கிரிஜா 'போராட்டம்' புதினத்தில் பெண்களுக்கு, கீழ்ச்சாதியைச் சேர்ந்த குடும்பத்திற்கு, பணக்காரர்களால் ஏற்படும் கொடுமைகளை, வாழ்வியல் சிக்கல்களை எடுத்துக்கூறி அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்பதையும் விளக்கியுள்ளார்.

### துணைமை பெண்கதைமாந்தர்களின் பின்புல வாழ்வியல் சிக்கல்களும் தீர்வுகளும்

#### ராசம்மா

'போராட்டம்' புதினத்தின் துணைமைப் பாத்திரம் ராசம்மா. தன் வீட்டிற்கு மருமகளாக வருவதற்கு உடன்படாதவராய் பண்ணையார் வரதராசன் இருந்தான். ருக்மாங்கதன் ராசம்மாவிடம், வீட்டைவிட்டு ஓடிப்போகலாம், அல்லது பெற்றோரை எதிர்த்து வாழலாம் என்று பல யோசனைகளைக் கூறினான். ராசம்மா எந்த யோசனைகளையும் ஏற்றுக்கொண்டதாய் தெரியவில்லை. ருக்மாங்கதன் வடிவேலுவிடம் "எங்கப்பாவும், அம்மாவும் மனசு மாறி அவங்க சம்மதம் குடுக்குற வரையில் ரெண்டுப் பேரும்

காத்துட்டிருக்கணும்னு சொல்லுது ராசம்மா"11 என்ற அவனின் கூற்று மூலம் ராசம்மாவின் பண்பை நாம் அறியமுடிகின்றது.

ருக்மாங்கதன் ராசம்மாவைத் தான் திருமணம் முடிப்பேன் என்று தீவிரம் காட்டவே, வரதராசன் தம்புசாமியின் நண்பன் இருசப்பனைக் கூப்பிட்டு விவரத்தைச் சொன்னார். அதற்கு இருசப்பன்,"அந்தப்பொண்ணு ராசம்மா இப்ப இந்த ஊர்ல இல்ல. மங்கம்மாவுடைய அப்பா ஊருக்குப் போயிருக்குது. அதாவது கிடுக்குப்பட்டியில் இருக்குது. திரும்பி வர நாலஞ்சு நாளாகுமாம். அங்கேயே முடிச்சிறலாம்னு"12 என்று கூறினான். வரதராசன் அவர்களுக்கு பணக்கட்டை தூக்கி வீசினார்.

மங்கம்மாளின் அப்பா, அம்மா வீட்டில் இல்லா சமயத்தில் வேலையை முடித்துவிட்டு, இருசப்பனின் கூட்டாளிகள் நான்கு பேரும் ஊருக்குள் சென்று வதந்திப்பரப்பினர்.

நாட்கள் செல்ல ராசம்மாவின் உடல் சரியாகிக் கொண்டே வந்தது. அப்பொழுது மங்கம்மா அவளின் திருமணப்பேச்சை எடுக்க, ராசம்மா "எனக்கு உசிரையே விட்றலாம் போல இருக்கு மங்கம்மா, நாலுபேரு மங்கம்மா, நாலு பேரு"13 என்று வாய் குழறச்சொல்லிவிட்டு ராசம்மா அழலானாள்.

ருக்மாங்கதனிடம் நடந்ததைக் கூறி உன்னுடைய தவறு இதில் இல்லை என்றுச்சொல்லி, திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்யவா என்று மங்கம்மா ராசம்மாவிடம் கேட்டாள். அதற்கு ராசம்மா "அப்படி ஒருக்கா முடியாதுன்னுட்டாருன்னு வய்யி. நான் கலியாணமே கட்டமாட்டேன் மங்கம்மா, இப்படியே இருந்துடுவேன்"14 என்று கூறினாள்.

மங்கம்மா, ருக்மாங்கதனிடம் இவ்விஷயத்தைக் கூறி, திருமணம் எப்போ பண்ணலாம் என்று கேட்க, ருக்மாங்கதன் மானத்தை இழந்த பொண்ணு பொதுவா என்ன செய்யனும்? உயிரை விட்டு விடவேண்டும். ஆனால் அதை விட்டு விட்டு திருமணத்திற்கு சம்மதமா? என்று கேட்கிறீர்கள். எனக்கு இதில் உடன்பாடு இல்லை, என்று கூறினான்.

இந்நிலையில் நீதிதேவன் பத்திரிக்கையிலிருந்து பேட்டி எடுக்க வந்திருந்த முருகேசன், ராசம்மாவைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாய் கூறினான்.

ராசம்மா, தான் தற்கொலைச் செய்து கொள்ளாமல், தீர்க்கமான முடிவை எடுத்தாள். தன் மனதில் தோன்றிய சந்தேகங்களை முருகேசனிடம் தெளிவாகக் கேட்டு விளக்கிக் கொண்டாள். எனக்கு நடந்ததைப் பற்றி ஊரிலே நாலு பேர் நாலுவிதமாக பேசுவார்கள். உங்கள் காது படவே அசிங்கமாகவோ, குத்தலாகவோ பேசுவார்கள். அப்போது ஏன் இவளைக் கட்டிக்கொண்டோம் என்று உங்களுக்கு அவமானமாய் இருக்கும் என்று அவள் கூற, முருகேசன் அப்படி நடக்காது என்று உறுதியளித்தான். இவள் சின்னதாய்புன்முறுவல் செய்தாள்.

ஒரு பெண்ணுக்கு பிரச்சனைகள் எந்த விதத்தில் வந்தாலும் மனம் கலங்காமல், திடமான, தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதாக ராசம்மாவின் பாத்திரம் அமைந்துள்ளது.

### காந்திமதி

வரதராசனின் மகன் காந்திமதி. இவள் ஒன்பதாம் வகுப்பு வரையில் மட்டுமே படித்தாள். தன் மகள் அதிகம் படித்தால் வருங்காலத்தில் தனக்கு அடங்காமல் போய் விடுவாள் என்று வரதராசன் நினைத்து அவளை பள்ளிக்கூடத்துக்கு அனுபவில்லை. காந்திமதியும் அதை பெரிதுபடுத்தவில்லை.

ஒரு நாள் சினிமா திரையரங்கில் ஒருவன் இவளிடம் தப்பாக நடக்க, அங்கு வந்த செல்லப்பன் அவனை அடித்து உதைத்து இவளைக் காப்பாற்றினான். இந்நிகழ்வுக்குப் பின் காந்திமதியும், செல்லப்பனும் ஒருவரையொருவர் காதலித்தனர். தன்னுடைய வீட்டு வேலையாளின் மகனை தன் மகள் காதலிக்கிறாளே என்று வரதராசனுக்கு கோபம் ஏற்படவே, அவளுக்கு திருமணம் செய்ய முடிவெடுக்கின்றன. இதனால் காந்திமதி செல்லப்பனுடன், தன் அண்ணனின் துணையுடன் வீட்டை விட்டு வெளியேறுகின்றாள்.

காந்திமதிக்குத் தன் அண்ணன் ருக்மாங்கதனை நினைத்தால் மட்டும் கோபம் வந்தது. தன்னுடைய காதலுக்கு உதவிகள் பல செய்யும் அண்ணன், ஏன் ராசம்மாவை புரிந்து கொள்ள மறுக்கின்றான், என்று நினைக்கும் போது அண்ணன் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டது. தன் பெற்றோரை விட்டு விட்டு செல்லப்பனுடன் வந்தது தனக்கு ஒரு பெரிய வருத்தமில்லை என்பதை "ஒன்னைப் பெறணும்னா இன்னொன்னு இழந்து தாங்க தீரணும். அவங்களைப் பெரிசா நினைச்சா உங்களை இழந்திருப்பேன். வருத்தம இல்லாம இருக்குமா? எனக்குப் பிடிக்காத ஒருத்தனுக்கு என்னைக் கட்டிக்கொடுத்தாங்கன்னா,





அதனால எனக்கு வர்ற வருத்தம் பயங்கரமானதா இருக்குமே" 15 என்று தன் நிலையை, தன் எண்ணத்தை செல்லப்பனிடம் கூறினாள்.

தன் தந்தையின் ஆடம்பர வாழ்க்கையை எதிர்க்க கூலி வேலை செய்யும், கீழ்ச்சாதியைச் சேர்ந்த ஒருவனை, தன் மனத்திற்கு பிடித்தவனை தன் தந்தையை எதிர்த்து துணிவுடன் திருமணம் செய்யப் புறப்படுகின்றாள்.தன் வாழ்க்கைச் சிக்கலுக்கு அவளே தீர்வு காணுகின்றாள்.

### முடிவுரை

தொடக்ககாலப் புதினங்கள் வழி பெண்களைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை எனினும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், மறுக்கப்பட்ட கல்வியையும் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் இருபதாம் நூற்றாண்டுப் புதினங்கள் பெண்களின் வாழ்க்கைப் பிரதிபலிப்புகள் எனலாம். தங்கள் மனங்களிலும், வாழ்க்கையிலும் முடித்து வைத்திருக்கும் இருள் முடிச்சுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றன புதினங்கள். அவ்வகையில் பெண்களின் வாழ்க்கையை வெளி உலகிற்குப் படம் பிடித்துக்காட்டி சிக்கலுக்குரிய தீர்வுகளையும் விளக்கிக் கூறுவதாய் அமைந்துள்ளது 'போராட்டம்'.

### குறிப்பு

1. திருமலை ம, ஒப்பிலக்கிய ஆய்வுகள், ப.17.
2. மோகன் இரா., டாக்டர் மு.வ.வின் நாவல்கள், ப.54.
3. ஜோதிர்லதாகிரிஜா., போராட்டம், ப.6.
4. மேலது., ப.9.
5. மேலது., ப.285.
6. மேலது., ப.320.
7. மேலது., ப.322.
8. மேலது., ப.323.
9. மேலது., ப.354.
10. மேலது., ப.361.
11. ஜோதிர்லதாகிரிஜா, போராட்டம், ப.40.
12. மேலது., ப.231.
13. மேலது., ப.249.
14. மேலது., ப.252.
15. மேலது., ப.310.